செ.வெ.எண்: 46 நாள்:26.01.2018

# பத்திரிக்கை செய்தி

தமிழக அரசின்
புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்
ரூ.25இலட்சம் மான்யத்துடன் கூடிய தொழிற்கடன் பெற
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்கள் அழைப்பு

தமிழ் நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மேம்படவும், புதிய தொழில் நிறுவனங்கள் முதல் தலைமுறை தொழில் முனைவோர் மூலம் ஏற்படவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **"புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம்"(NEEDS)** அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கான அரசு ஆணை **G.O.Ms.No.49 MSME (D2) Dept. dt. 29.10.2012ல்** வெளியிடப்பட்டு உள்ளது. அதன் பேரில் மாவட்டத்தில் பட்டம், பட்டயம், ஐடிஐ/ தொழிற்கல்வி படித்த முதல் தலைமுறை தொழில் முனைவோர் சுயமாக தொழில் துவங்கிட வசதி செய்யப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற பொது பிரிவினருக்கு வயது வரம்பு 21 வயது முதல் 35 வயது வரை மற்றும் பெண்கள்/ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத் திறனாளிகள்/சீர்மரபினர்/ திருநங்கைகள் ஆகிய சிறப்பு பிரிவினருக்கு 21 வயது முதல் 45 வயது வரை ஆகும். பயனாளிகள் 3 வருடத்திற்கு குறையாமல் தமிழகத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மேலும் அனைத்து உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த பொருளாதார ரீதியாக சாத்தியப்படக்கூடிய தொழில் ( எதிர்மறை பட்டியலில் உள்ள தொழில்கள் நீங்களாக) தொடங்க 25 சதவீதம் அரசு மானியத்துடன் (அதிகபட்சம் ரூ.25 லட்சம்) கூடிய 5 லட்சம் முதல் 1 கோடி வரை கடனுதவி வங்கிகள் மூலம் வழங்கப்படும். தவிர தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஒரு மாத கால கட்டாய தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்படும். வியாபாரம், வாகனங்கள் மற்றும் நேரிடை விவசாயத்திற்கு இத்திட்டத்தின் கீழ் பயன் பெற இயலாது.

இவைகள் தவிர பொது பிரிவினர் 10 சதவீதமும், சிறப்பு பிரிவினர் 5 சதவீதமும் சொந்த முதலீடாக செலுத்த வேண்டும். தவணை தவறாமல் கடனை திருப்பி செலுத்தும் தொழில் முனைவோர்களுக்கு கூடுதல் சலுகையாக 3 சதவீதம் பின்முனை வட்டி மானியம் வழங்கப்படும்.

**இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பயனடைய அல்லது இதுகுறித்து மேலும் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம்,** திருநெல்வேலி **அவர்களை நேரிலோ அல்லது 0462 – 2572162, 0462 – 2572384/ 9944778924/9042237914 என்ற தொலைபேசி வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம்.**

இத்திட்டத்தில் தகுதியுள்ள தொழில் முனைவோர்கள் விண்ணப்பித்து தொழிற்கடன் உதவி பெற்று பயன்பெறலாம் என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி**